அஹமத் அலி குரைஷி

எதிர்

உத்தரப்பிரதேச மாநிலம் மற்றும் பிறர்

(குற்றவியல் மேல்முறையீடு எண். 138/2020)

ஜனவரி, 30, 2020

(மாண்புமிகு நீதியரசர்கள் திரு.அசோக் பூஷன் மற்றும் எம்.ஆர். ஷா)

குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் 1973 – பிரிவு 482 உயர்நீதிமன்றத்தில் உள்ளார்ந்த அதிகாரம் – மேல்முறையீட்டாளர்கள் – குற்றம் சாட்டப்பட்டவர்கள் மற்றும் 2-ஆம் எதிர்மனுதாரர் – புகார்தாரர் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் மற்றும் அருகாமை வீட்டுக்காரர்கள் - 2015-இல் குற்றம் சாட்டப்பட்டவரின் தந்தை சொத்துக்களை பாகம் பிரிக்க கோரி புகார்தாரருக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்தார் – அது பல சச்சரவுகளை தரப்பினர்கிடையே ஏற்படுத்தியது – 29,08,2016 அன்று புகார்தாரர் பிரிவு 156(3) கு.வி.மு.ச. கீழ் மனு தாக்கல் செய்ததில் 19.07.2016 அன்று அவருடைய மகள்கள் அவரது வீட்டிற்கு வெளியே உள்ள பொது இடத்து கைபம்பு நீர் எடுக்க சென்றிருந்த போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் அநாகரிகமான சைகைகளில் ஈடுபட்டது மற்றும் அவர்களை தாக்கியது – மேலும், அதே நாளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வீட்டிற்குள் நுழைந்து புகார்தாரரையும் அவரது மகள்களையும் தாக்கியது – மனு நிராகரிக்கப்படுகிறது – மற்றொரு புகார் தாக்கல் செய்து ஏற்கனவே தாக்கல் செய்த மனுவில் சொல்லப்பட்டது – அமர்வு நீதிபதி

மேல்முறையீட்டாளர்களை அழைக்க உத்தரவிட்டது – மேல்முறையீட்டாளர்கள் பிரிவு 482 கு.வி.மு.ச. கீழ் மனு தாக்கல் செய்தது – தள்ளுபடி செய்யப்பட்டது – மேல்முறையீட்டில் 19,07,2016 தேதியில் நடைபெற்றதாக சொல்லப்படும் சம்பவத்திற்கு முன்பாகவே புகார்தாரருக்கும் மேல்முறையீட்டாளரின் தந்தைக்கும் சொத்து சம்மந்தமான பிரச்சினை நிலுவையில் இருந்து வருவது – சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அதே தேதியில் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு அதன்பேரில் பிரிவுகள் 151, 157, 116 கு.வி.மு.ச. இருதரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருதரப்பினரும் அமைதி காக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது – ஆறு வாரங்களுக்கு பிறகு பிரிவு 156(3) கு.வி.மு.ச. கீழ் புகார்தாரர் மனுவை குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மனுவை தாக்கல் செய்துள்ளார் – மேலும் அமர்வு நீதிபதி தனது அழைப்பாணை உத்தரவில் 2-வது சம்பவமாக சொல்லப்படும் மேல்முறையீட்டாளர்கள் அவரது தந்தை மற்றும் மற்ற குற்றம்சாட்டப்பட்டவர்கள் புகார்தாரரின் வீட்டிற்குள் நுழைந்து புகார்தாரரையும் அவரது மகள்களையும் அடித்தனர் என்பதை நம்பவில்லை – புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ஒரு பகுதியை நம்பாமல் இருப்பது ஏற்கனவே நடந்ததாக சொல்லப்படும் ஒரு சம்பவத்தின் மீது சந்தேகத்தின் நிழலை ஏற்படுத்துகிறது – குற்றவியல் நடவடிக்கைகளை புகார்தாரர் தனிப்பட்ட உள்நோக்கத்துடன் தாக்கல் செய்திருப்பது – உச்சநீதிமன்றத்தில் பஜன்லால் தீர்ப்பை உயர்நீதிமன்றம் பார்வையிட்டபோதிலும் இந்த வழக்கின் உண்மை தன்மை குறித்து பரிசீலனை செய்யவில்லை – அதாவது இந்த வழக்கின் தன்மையானது

பஜன்லால் வழக்கில் 7 வகையான வகைப்பாட்டிற்குள் தற்போது வழக்கு உட்படுகிறது – உயர்நீதிமன்றம் கு.வி.மு.ச., பிரிவு 482-கீழ் உள்ள அதிகார வரம்பை பயன்படுத்த தவறிவிட்டது – மேல்முறையீட்டிற்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகள் நிராகரிக்கப்பட்டது – தண்டனை சட்டம் 1860 – பிரிவுகள் 323, 354, 452, 504, 506 – போக்சோ வழக்கு 2012 பிரிவு 4, 7, 8

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு இந்த நீதிமன்றம் பிறப்பிப்பது

1.1. இந்த வழக்கின் இரு தரப்பினரும் உறவினர் மற்றும் அண்டை வீட்டுக்காரர்கள் மற்றும் புகார்தாரருக்கும் குற்றம் சாட்டப்பட்டவருக்கும் இடையே உரிமையியல் வழக்கு பிரச்சினை சொத்து சம்மந்தமாக நடைபெற்று கொண்டிருக்கிறது. 19.07.2016 தேதியில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கு முன்பாகவே, புகார்தாரருக்கும் மேல்முறையீட்டாளரின் தந்தைக்கும் சொத்து பிரச்சினை இருப்பது தெரியவருகிறது. அதே தேதியில் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு கு.வி.மு.ச., பிரிவு 151, 157, 116-படி இரு தரப்பினரும் அமைதியை நிலைநாட்ட செயல்முறை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் தெரியவருகிறது – அதன் பின்னிட்டு 6 வாரங்களுக்கு பிறகு புகார்தாரர் கு.வி.மு.ச. பிரிவு 156(3)-ன் கீழ் அமர்வு நீதிபதி முன்பாக புகார் தாக்கல் செய்துள்ளார். மேலும், அமர்வு நீதிபதியின் அழைப்பாணை உத்தரவில் தெரியவருவது என்னவெனில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் மீது கொடுக்கப்பட்ட புகாரில் 19.07.2016-ல்

இரண்டு சம்பவங்கள் குறித்து சொல்லப்படுகிறது. ஒரு சம்பவமானது புகார்தாரரின் வீட்டிற்கு முன் பொது கைபம்பு அருகே நடந்த சம்பவம் இரண்டாவது அதே நாளில் மேல்முறையீட்டாளர் அவர்களது தந்தை மற்றும் மற்ற குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் புகார்தாரர் மற்றும் அவருடைய இரு மகள்களையும் தாக்கும் சம்பவம் ஆகும். புகாரில் நடந்ததாக சொல்லப்படும் இரண்டாவது சம்பவத்தை அமர்வு நீதிபதி தனது அழைப்பாணை உத்தரவில் நம்பவில்லை. புகாரில் நடந்ததாக சொல்லப்படும் ஒரு பகுதி சம்பவத்தை நம்பாமல் இருப்பது மற்றொரு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதி சம்பவத்தின் மீது நிழலை ஏற்படுத்துகிறது. தரப்பினருக்கிடையே உரிமையியல் வழக்கு நிலுவையில் இருப்பதை அமர்வு நீதிபதி தனது தீர்ப்பில் பார்வையிட்டு குறிப்பிடப்படவில்லை. (183-E-H; 184-A-B)

1.3. தற்போதைய வழக்கில் புகார்தாரர் தனிப்பட்ட பகையின் காரணமாக ஒரு தவறான நோக்கத்துடன் குற்றவியல் நடவடிக்கைகளை தொடங்கியுள்ளார். உயர்நீதிமன்றமானது ஹரியானா மாநிலம் மற்றும் பலர் எதிராக பஜன்லால் மற்றும் பலர் வழக்கின் தீர்ப்புரையை கவனத்தில் கொண்ட போதிலும் இந்த வழக்கின் உண்மை தன்மையானது பஜன்லால் வழக்கில் எடுத்து சொல்லப்பட்ட வகைப்பாட்டிற்குள் உட்படும் என்பதை ஆராயவில்லை. தற்போதைய வழக்கானது பஜன்லால் வழக்கில் 7-வது வகைப்பாட்டிற்குள் உட்பட்ட வழக்காகும் மற்றும் உயர்நீதிமன்றமானது பிரிவு 482 கு.வி.மு.ச உள்ளார்ந்த அதிகார வரம்பை பயன்படுத்த தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக தவறான நோக்கத்துடன்

தொடரப்பட்ட இந்த குற்றவியல் நடவடிக்கைகளை அனுமதிக்க தொடருமானால் அது நீதிமன்றத்தின் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் என்பதால் இந்த நீதிமன்றம் தலையீடுவது அவசியமாகிறது. புகார் வழக்கு எண். 1/2017-ல் தொடங்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகள் நீக்கரவு செய்யப்படுகிறது. (பத்திகள் 23-25) (184-C-E)

ஹரியானா மாநிலம் மற்றும் பலர் எதிராக பஜன்லால் மற்றும் பலர்

(1992) துணை SCC 355: [1990] 3 Supl. SCR 259

வினித்குமார் மற்றும் பலர் எதிர் உத்திரபிரதேச மாநிலம் மற்றும் பலர்

(2007) 13 SCC 369: [2017] 6 Supl. SCR 922

கர்நாடகா மாநிலம் எதிராக எல்.முனுசாமி

(1977) 2 SCC 699: [1977] 3 Supl. SCR 113

கர்நாடகா மாநிலம் எதிராக தேவேந்திரப்பர்

(2002) 3 SCC 89: [2002] 1 Supl. SCR 275

சுந்தர் பாபு எதிராக தமிழ்நாடு மாநிலம்

(2009) 14 SCC 244: [2009] 3 Supl. SCR 326

<u>வழக்கு தீர்வு குறிப்புகள்</u>

(1990) 3 துணை SCR 259 ஆதரவாக பத்தி 10

(2017) 6 SCR 922 ஆதரவாக பத்தி 11

(1977) 3 SCR 113 ஆதரவாக பத்தி 12

(2002) 1 SCR 275 ஆதரவாக பத்தி 13

(2009) 3 SCR 326 ஆதரவாக பத்தி 15

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண். 138/2020

கு.வி.மு.ச. பிரிவு 482-இன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்ப எண்.5890/2018-இல் அலகாபாத் உயர்நீதிமன்றம் 21.02.2018 அன்று வழங்கிய தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து எழுகிறது.

எஸ்.கே.வர்மா, ராஜன் குமார் சௌராஷியா, திவ்யான்ஸ் ராய் மற்றும் சந்தீப் சிங், மேல்முறையீட்டாளர்களின் வழக்கறிஞர்கள்.

கார்வேஷ் காப்ரா, சுர்ஜீத் சிங், அனுபவ் டி.மிஸ்ரா, லாக்னேஸ் மிஸ்ரா மற்றும் வி.என். ரகுபதி, எதிர்மனுதாரர்களுக்கான வழக்கறிஞர்கள்,

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பானது நீதியரசர் அசோக்பூஷன் அவர்களால் பகரப்பட்டது

1. இந்த மேல்முறையீடு 21.02.2018 தேதியிட்ட உயர்நீதிமன்றத்தின் உத்தரவை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்டதாகும். மேல்முறையீட்டாளர்கள் / குற்றம் சுமத்தப்பட்டவர்கள் குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 482-ன் கீழ் புகார் வழக்கு எண். 1/2017 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது

நிராகரிக்கப்பட்டது. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த மேல்முறையீட்டை முடிவு செய்வதற்கு கவனிக்கப்பட வேண்டிய வழக்கின் சுருக்கமான உண்மைகள்: -

(I) மேல்முறையீட்டாளர்களும் 2-ம் எதிர்மனுதாரர்களும் ஒரே குடும்பத்தை சேர்ந்த அருகாமை வீட்டுக்காரர்கள் ஆவார்கள். குற்றம் சாட்டப்பட்ட நபர்களில் அன்வருள் ஹக் அவரின் தந்தையானவர் அசல் வழக்கு எண். 744/2015 என்ற வழக்கை புகார்தாரருக்கு எதிராக உரிமையியல் நீதிபதி (ஜீனியர் பிரிவு) நீதிமன்றத்தில் வழக்கை புகார்தாரருக்கு எதிராக தாக்கல் செய்து சொத்துக்களை பிரிப்பது தொடர்பான மேற்படி வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. தரப்பினர்களுக்கிடையேயான வழக்கு சம்மந்தமான பல மோதல்கள் ஏற்பட்டன.

(II) 19.07.2016 அன்று இரு தரப்பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. 19.07.2016 அன்று காவல்துறை சம்பவ இடத்திற்கு சென்று பிரிவு 151, 107 மற்றும் 116 குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டத்தின் கீழ் நடவடிக்கைகள் தொடரப்பட்டு அந்த சம்பவ இடத்தில் இரு தரப்பினரும் அமைதி காக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(III) 29.08.2016 அன்று சஜ்ஜாத் குரைஷி என்பவர் குற்றவியல் நடைமுறை சட்டம 156(3) கீழ் ஒரு புகார் மனுவை அஹமத்

அலி குரைஷி மற்றும் லியாகத் அலி குரைஷி மற்றும் அவருடைய தந்தை அன்வருள் ஹக் மற்றும் அவர்களது மூன்று சகோதரர்கள் ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. அந்த புகாரில் 19.07.2016 மாலை 06.00 மணிக்கு நடந்த சம்பவத்தைக் குறித்து சொல்லப்பட்டது. அந்த புகாரில் கூறப்பட்ட சாரம்சம் என்னவெனில், புகார்தாரரின் இரண்டு மகள்களான பிர்தௌஸ் பானோ மற்றும் குலிஷ்தா பானோ ஆகிய இருவரும் புகார்தாரரின் வீட்டின் வெளியே உள்ள பொது கைபம்பு மூலம் தண்ணீர் எடுக்க சென்றதாகவும் அப்பொழுது அஹமத் அலி மற்றும் லியாகத் அலி ஆகியோர் அநாகரிகமான சைகைகளில் ஈடுபட்டதாகவும் மேலும், அவர்களை நோக்கி அவர்களின் மார்பகங்களை அழுத்த ஆரம்பித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. பிர்தௌஸ் பானோவிற்கு நகத்தில் காயம் ஏற்பட்டது. சிறுமிகள் தாக்கப்பட்டனர். புகார்தாரர் எழுப்பிய சத்தத்தின் பேரில், அவரது மனைவி மற்றும் பலர் சம்பவ இடத்திற்கு வந்து தலையிட்டனர்,

(IV) மேலும், அதே நாளில் குற்றம் சாட்டப்பட்ட அன்வருள் ஹக் மற்றும் அவர்களது சகோதரர்கள் பொதுவான நோக்கத்துடன் புகார்தாரரின் வீட்டிற்குள் வலுகட்டாயமாக நுழைந்து தகாத வார்த்தைகளால் திட்டியதுடன், வீட்டிற்குள் இருந்த மகள்களை அடிக்கத் தொடங்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. சம்பவம் குறித்து புகார்தாரர் தகவல்

அளித்ததாகவும் ஆனால், அவர்கள் கொடுத்த விண்ணப்பம் எடுக்கப்படவில்லை என்றும் மருத்துவ சிகிச்சை நடத்தவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இதுகுறித்து ஜான்பூர் காவல்துறை கண்காணிப்பாளர் லக்னோ டிஜிபி மற்றும் தேசிய மனித உரிமை ஆணையம், புதுடெல்லி ஆகியோர்களுக்கு பதிவு தபால் மூலம் விண்ணப்பம் அனுப்பப்பட்டது. மேலும், தேசிய மனித உரிமை ஆணையம், புது டெல்லிக்கு அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்ட குற்றங்கள் அந்த மனுவில், குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இ.த.ச., பிரிவு 323, 354, 504, 506, 452 மற்றும் போக்சோ சட்டத்தின் பிரிவு 4 ஆகியவற்றின் கீழ் குற்றம் சாட்டப்பட்டது.

(V) மேலும், அந்த விண்ணப்பத்தில் பல்வகை மனு வழக்கு எண். 14/2016 எண் கொண்ட வழக்கு குறிப்பும் பதிவு செய்யப்பட்டது. புகார்தாரரின் விண்ணப்பத்தை கற்றறிந்த கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி (போக்சோ சட்டம்) அவர்கள் பரிசீலித்து 14.10.2016 தேதியிட்ட உத்தரவு படி மேல்முறையீடு செய்தவர்கள் மீது வழக்கு பதிவு செய்ய போதுமான காரணங்கள் இல்லை எனக்கூறி விண்ணப்பத்தை நிராகரித்துள்ளார், மேலும், 151, 107, 116 குற்றவியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட காவல்நிலைய அறிக்கையின் படியும் இந்த சம்பவம் தொடர்பாக

நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது கற்றறிந்த அமர்வு நீதிபதி கவனித்துள்ளார்,

(VI) புகார்தாரர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் குற்றவியல் சீராய்வு மனுவை தாக்கல் செய்தார். 22.11.2016 தேதியிட்ட தீர்ப்பின் படி, உயர்நீதிமன்றம் விண்ணப்பத்தை நிராகரிக்கும் உத்தரவில் தலையிடவில்லை என்றும் இருந்தபோதிலும், குற்றவியல் நடைமுறைச்சட்ட விதிகளின் படி, சம்மந்தபட்ட நீதிமன்றத்தில் உரிய விண்ணப்பத்தை விண்ணப்பதாரர் தாக்கல் செய்து மாற்று தீர்வு இருப்பதாக கூறியிருந்தது.

(VII) ஏற்கனவே, தேசிய மனித உரிமைகள் ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பமானது தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் அறிவுறுத்தலின்பேரில், 07.11.2016 தேதியிட்ட CO (நகரம்) ஜான்பூருக்கு அனுப்பப்பட்ட கடித்தின் மூலம் புகாரை விசாரிக்கும்படி காவல் கண்காணிப்பாளர் உத்தரவிட்டார். அதன்படி, ஜான்பூர் CO (நகரம்) விசாரணை நடத்த புகார்தாரரின் மகள்களான பிர்தெளஷ் பானோ, குலிஷ்தான் பானோ மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் உட்பட பல்வேறு நபர்களின் வாக்குமூலங்களை பதிவு செய்து 11.12.2016 அன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதில், புகார்தாரரால் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபணம் ஆகவில்லை என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(VIII) பின்னிட்டு புகார்தாரர் புகார் வழக்கு 1/2017 என்ற எண்ணில் 04.10.2017-ல் குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம்

பிரிவு 156(3)-ன் கீழ் மேல்முறையீட்டாளர்கள் மற்றும் பிற குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது ஏற்கனவே மனுவில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகளை குறித்து மேலே சொல்லப்பட்ட புகார் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

(IX) 19.12.2017 தேதியிட்ட உத்தரவு படி, கற்றறிந்த அமர்வு நீதிபதி பிரிவு 323, 353, 504, 506 இ.த.ச மற்றும் 7/8 போக்சோ சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டாளர்களுக்கு சம்மன் அனுப்பினார். மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றத்தில் பிரிவு 482 கு.வி.மு.ச. ஒரு விண்ணப்பத்தை தாக்கல் செய்து அதில் புகார் வழக்கு எண். 1/2017 என்ற எண் கொண்ட வழக்கில் அனுப்பப்பட்ட அழைப்பாணை உத்தரவின் முழு நடவடிக்கையும் இரத்து செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டது. 21.02.2018 தேதியிட்ட தீர்ப்பின் படி மேற்படி மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது.

3. மேல்முறையீட்டாளர் கற்றறிந்த வழக்கறிஞர் கூறும்பொழுது மேல்முறையீட்டாளர் தந்தை சிவில் வழக்கு எண். 744/2015 தொடர்ந்து சிவில் ஜட்ஜ் (ஜீனியர் நீதிமன்றத்தில்) நிலுவையில் இருந்து வருகிறது. மேலும், சிவில் நீதிபதி நீதிமன்றம் (ஜீனியர் பிரிவு) மேல்முறையீட்டாளருக்கு அழுத்தம் கொடுக்கவும் சிவில் நீதிபதி நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள சொத்து தகராறை தீர்க்கவும் மனுதாரர்கள் அற்பமான புகார்களை மனித உரிமைகள் ஆணையம், காவல்துறை அதிகாரிகள் அமர்வு நீதிபதி முன்பு

மேல்முறையீடு செய்தவர்கள் மற்றும் புகார்தாரர்கள் அற்பமான புகார்களை அளித்துள்ளனர்.

4. மேலும், ஏற்கனவே, அமர்வு நீதிபதியானவர் பிரிவு 156(3) கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவை 29.08.2016-ல் நிராகரித்துள்ளார். மேலும், மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்ட மனுவானது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டும் ஆனால், துணை காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களால் நடத்தப்பட்ட விசாரணை மற்றும் அவரது அறிக்கையில் புகார்தாரரால் நடந்ததாக சொல்லப்பட்ட சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாறு மனுவானது நிராகரிக்கப்பட்டபொழுதிலும், விசாரணையில் இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக எதுவும் கண்டறியப்படாத நிலையில் 1/2017 என்ற புகார் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, புகார்தாரரின் புகார் ஆனது நீதிமன்ற நடவடிக்கை செயல்முறையை தவறாக பயன்படுத்துவதை தவிர வேறொன்றும் இல்லை. மேலும், சொத்து தகராறில் தீர்வு காண மேல்முறையீட்டாளர்கள் மற்றும் அவரின் தந்தை மீது அழுத்தம் கொடுப்பதற்கும் கொடுக்கப்பட்ட புகார் ஆகும்,

5. புகாரை ரத்து செய்ய தகுதியான நிகழ்வுகள் மற்றும் உண்மை நிலையை உயர்நீதிமன்றம் பரிசீலிக்க தவறிவிட்டது. மேலும், இந்த புகார் ஆனது வெளிப்படையாக தீய எண்ணத்துடன் தவறான நோக்கத்துடன் தீங்கீழைக்கும் வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. மேலும், இதே சம்பவத்திற்கு எதிராக கு.வி.மு.ச பிரிவு 151, 107, 115 கீழ் காவல்துறையினர் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர்கள் அமைதியை நிலைநாட்டுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. மனுதாரர்கள் மீது கூறப்பட்டுள்ள சம்பவம் கற்பனையானது மற்றும் முற்றிலும் தவறானதாகும்.

7. உயர்நீதிமன்றமானது வழக்கை ரத்து செய்ய தவறிவிட்டதாக சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், கு.வி.மு.ச 482 கீழ் உள்ள அதிகார வரம்பை பயன்படுத்தி புகாரின் மேல்முறையீட்டாளர் மீது சொல்லப்பட்ட சம்பவங்கள் உண்மையா பொய்யா என்ற கேள்வியில் பரிசீலனை செய்யாமல் ஆதாரங்களை மதிப்பீடு செய்யவில்லை என்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

8. மேலும், 11.12.2016 தேதியிட்ட புகார்தாரரால் 156(3) கு.வி.மு.ச, மனு மற்றும் 11.12.2016 தேதியிட்ட விசாரணை அறிக்கை மற்றும் ஜௌபூர் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட இணைப்பு CA/2 ஆகியவை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

9. நாங்கள் தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் சமர்ப்பிப்புகளைப் பரிசீலித்து, பதிவாவணத்தைப் பார்வையிட்டோம்.

10. இந்த வழக்கின் உண்மை கூற்றுகளையும் வழக்கறிஞர்கள் சார்பில் முன்வைத்த சமர்ப்பிப்புகளை ஆராய்வதற்கு முன்பாக உயர்நீதிமன்றத்தால் பிரிவு 482 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் செயல்படுத்தப்படும் உள்ளார்ந்த அதிகார வரம்பின் நோக்கம்

ஆகியவற்றை பார்க்க வேண்டியது அவசியமாகிறது. பிரிவு 482 கு.வி.மு.ச. அதிகார வரம்பை கானும்பொருட்டு ஹரியானா மாநிலம் எதிர் பஜன்லால் மற்றும் பிறர் 1992 Suppl. (1) SCC 355 பிரிவு 482 Cr.P.C Article 226-ன் நோக்கம் மற்றும் நோக்கத்தை விரிவாக கருத்தில் கொண்ட குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்யும் சூழலில் அரசியலமைப்பின் வகைப்பாட்டினை பட்டியல் செய்யப்பட்டுள்ளது. அதில் குற்றவியல் வழக்குகளை ரத்து செய்வதற்கு உயர்நீதிமன்றத்தால் சட்டப்பிரிவு 482 கு.வி.மு.ச. அதிகாரத்தை பயன்படுத்தாலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

"மேலும் பத்தி 102-ல் பிரிவு 226 அல்லது பிரிவு 482 கு.வி.மு.ச. கீழ் உள்ள உள்ளார்ந்த அதிகாரங்களை பகுத்தாய்ந்து பின்வரும் வகையான வழக்குகளை எடுத்துக்காட்டுகள் மூலம் வழங்குகிறோம். நீதிமன்றத்தின் செயல்முறைகளை தவறாக பயன்படுத்துவதை தடுக்க அல்லது நீதியின் முடிவை பாதுகாக்க அத்தகைய அதிகாரத்தை பயன்படுத்தலாம். மேலும், துல்லியமான தெளிவாக வரையறுக்கப்பட்ட போதுமான வழிவகைகளை வளைந்துகொடுக்காத வழிகாட்டுதல்கள் அல்லது கடுமையான வகைபாட்டு முறைகளை முன்வைத்தது மற்றும் அத்தகைய அதிகாரம் பயன்படுத்த வேண்டிய எண்ணற்ற வழக்குகளை முழுமையாக பயன்படுத்த சாத்தியமில்லை"

(1) முதல் தகவல் அறிக்கை புகாரில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அவற்றின் மேலோட்டமான முக எடுப்பு மாத்திரத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டாலும், முழுவதுமான

எடுத்துக்கொள்ளப்பட்டாலும், முதன்மையான பார்வையில் எந்த குற்றமும் இல்லை அல்லது குற்றம் சாட்டப்பட்டவர்களின் மீது எந்த முகாந்தரமும் இல்லை என்ற நிலையிலும்

(2) முதல் தகவல் அறிக்கை மற்றும் பிற ஆவணங்களில் ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் முதல் தகவல் அறிவிக்கையுடன் ஏதேனும் இருந்தால், அதில் கைது செய்யப்படுவதற்கான குற்றம் ஏதேனும் புலப்படாத நிலையிலும், காவல்துறையினரால் மேற்கொள்ளப்படும் அதிகாரிகள் பிரிவு 156(1) கீழ் மேற்கொள்ளப்படும் புலன் விசாரணையில் நியாயப்படுத்தும் வகையில் இருக்கும்பட்சத்தில் குற்றவியல் நடுவரின் உத்தரவு பிரிவு 155(2) கு.வி.மு.ச. கீழ் பிறப்பிக்கப்படாத பட்சத்திலும்

(3) முதல் தகவல் அறிக்கை அல்லது புகாரில் கூறப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய குற்றச்சாட்டுக்கள் மற்றும் அதற்கு ஆதராவ சேகரிக்கப்பட்டுள்ள ஆதாரங்கள் எந்த குற்றத்தையும் வெளிப்படுத்தவில்லை என்ற நிலையிலும் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக எந்த வழக்கும் மேற்கொள்ள இயலாது என்ற நிலையிலும்

(4) முதல் தகவல் அறிகையில் உள்ள குற்றச்சாட்டுக்கள் கைது செய்யக்கூடிய குற்றமாக இல்லாமல், அடையாளம் காண முடியாத குற்றமாக இருக்கும் பட்சத்திலும் கு.வி.மு.ச. 155(2) கீழ் கருதப்படும் குற்றவியல் நடுவரின் உத்தரவு இல்லாமல் எந்த ஒரு காவல்துறை அதிகாரியும் புலன் விசாரணையும் மேற்கொள்ள அனுமதிக்கப்படாத நிலையிலும்

(5) முதல் தகவல் அறிக்கை அல்லது புகாரில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மிகவும் அற்பமானதாகவும் சாத்தியமற்றதாகவும் இருக்கும் பட்சத்திலும் எந்தவொரு அறிவார்ந்த நபரும் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக போதுமான காரணம் உள்ளது என்ற நியாயமான முடிவுக்கு வர இயலாது என்ற நிலையிலும்

(6) உரிய சட்ட விதிக்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட சட்ட விதிமுறை கோட்பாடுகளால் தடை செய்யப்பட்ட நிலையில் (ஒரு குற்றவியல் நடவடிக்கை தொடங்கப்பட்டதின் கீழ்) ஒரு வெளிப்படையான சட்டத்தடை இருந்தால் வழக்கு நடவடிக்கைகளின் தொடர்ச்சி அல்லது குறிப்பிட்ட சட்ட விதிமுறைகள் அல்லது குறிப்பிட்ட சட்டம் பாதிக்கப்பட்ட தரப்பினர் குறைகள் தீர்வு செய்ய வகை செய்யும் வகையில் இருக்கும் பட்சத்திலும்

(7) குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது பழிவாங்கும் நோக்கத்துடன் ஒரு கிரிமினல் வழக்கை தவறாக தீங்கிழைக்கும் வகையில் நிறுவப்பட்டால்

11. மேலும், இந்த நீதிமன்றமானது வினித் குமார் மற்றும் பிறருக்கு எதிராக உத்திரபிரதேசம் மாநிலம் மற்றும் ஒருவர் (2017) 13 SCC 369, 482 Cr.P.C கீழ் உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பை குறித்து பரிசீலனை செய்துள்ளது. இ.த.ச பிரிவு 452, 376 மற்றும் 323 கீழ் கூடுதல் சிவில் நீதிமன்ற மேஜிஸ்ட்ரேட் உத்தரவிடப்பட்ட அழைப்பாணைக்கு எதிராக மாவட்ட நீதிபதியின் உத்தரவால் தள்ளுபடி செய்யப்பட்டது.

12. பிரிவு 482 கு.வி.மு.ச கீழ் உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை இந்த நீதிமன்றம் மீண்டும் மீண்டும் ஆய்வு செய்து, பிரிவு 482 கு.வி.மு.ச. கீழ் உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பை நிர்வகிக்கும் பல கோட்பாடுகளை வகுத்துள்ளது. இந்த நீதிமன்றத்தின் 3 நீதிபதிகள் அமர்வு கர்நாடக மாநிலம் எதிராக எல்.முனுசாம (1977) 2 SCC 699 தொடர அனுமதிப்பது நீதிமன்றத்தின் செயல்பாட்டின் துஷ்பிரயோகம் அல்லது நீதியின் முடிவுகளுக்கு தேவை என்ற முடிவுக்கு வந்தால், ஒரு வழக்கை ரத்து செய்ய உயர்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. அந்த தீர்ப்பின் பத்தி 7-ல் கீழ்கண்டவாறு கூறப்பட்டுள்ளது (SCC. Pg. 703)

"7... இந்த ஆரோக்கியமான அதிகாரத்தைப் பயன்படுத்துவதில், தொடர அனுமதிப்பது செயல்முறையின் துஷ்பிரயோகம் என்ற முடிவுக்கு வந்தால், ஒரு வழக்கை ரத்து செய்ய உயர்நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. நீதியின் முடிவுகளுக்காக நடவடிக்கை ரத்து செய்ய வேண்டும் சிவில் மற்றும் கிரிமினல் விவகாரங்களில் உயர் நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரங்களை சேமிப்பது, ஒரு நல்ல பொது நோக்கத்தை அடைவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. அதாவது நீதிமன்ற நடவடிக்கைகள துன்புறுத்தல் அல்லது துன்புறுத்தலை ஆயுதமாக பயன்படுத்தக்கூடாது. ஒரு குற்றவியல் வழக்கிற்கு பின்னால் ஒரு வழக்கை தொடர்வதற்கான அடிப்படை முகாந்திரம் இல்லாமல் அதன இயல்பு தன்மையின் எந்தவொரு நிலைநிறுத்தல் அடிப்படை ஆதாரம் இல்லாத பட்சத்தில்

உயர்நீதிமன்றமானது தனது உள்ளார்ந்த அதிகாரத்தை பயன்படுத்தி நீதியின் நலனை காக்கும்பொருட்டு நிராகரிக்கலாம். நீதியின் நலனை முன்னிறுத்துவது வெறும் சட்டத்தின் முடிவை விட உயர்வானதாகும். மேலும், சட்டமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டத்தன் படியும் நீதி வழங்க வேண்டும். மேலும், அரசிற்கும் அதனுடைய மக்களுக்கும் உயர்நீதிமன்றத்தின் உள்ளார்ந்த அதிகாரத்தை பாதுகாக்கும் நோக்கில் அமைய வேண்டும்"

13. கர்நாடகம் மாநிலம் மற்றும் எம்.தேவேந்திரப்பா (2002) 3 SCC 89, பிரிவு 482-ன் நோக்கத்தை 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வு ஆராய்வு செய்து பிரிவு 482-ன் கீழ் உள்ள வரம்பை கருத்தில் கொள்ள சந்தர்ப்பம் வாய்த்தது. இந்த நீதிமன்றமானது சில கோட்பாடுகளை வகுத்தது. அதன்படி, நீதியின் முன்னேற்றத்திற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருப்பதாகவும், அநீதியை உருவாக்கும் வகையில் அந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தால், துஷ்பிரயோகத்தை தடுக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது. மேலும், நீதிமன்றத்தின் எந்தவொறு நடவடிக்கையும் தொடங்குவது / தொடர்வது நீதிமன்றத்தின் செயல்முறையை தவறாகப் பயன்படுத்துவதாகவோ அல்லது இந்த நடவடிக்கைகளை ரத்து செய்வதாகவோ இருந்தால், நீதிமன்றமானது நீதியின் முடிவுகளுக்குச் சேவை செய்யும் என்று கண்டறிந்தால், அதை ரத்து செய்வது நியாயமானது. பின்வரும் பாரா 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள (SCC. Pg. 94)

"6... அனைத்து நீதிமன்றங்களும் சிவில் அல்லது குற்றவியல் உடைமையாக இருந்தாலும் அரசியலமைப்பின் உள்ளார்ந்த வெளிப்படையான ஏற்பாடு இல்லாத நிலையில் அனைத்து வகையான அதிகாரங்களையும் சரியான நோக்கத்தற்கு பயன்படுத்தவும் தவறை நீக்குவதற்கும் நீதிமன்ற செயல்பாடு வகுமுறை செய்துள்ளது. மேலும், இந்த பிரிவின் கீழ் உள்ள அதிகார வரம்பை செயல்படுத்தும் பட்சத்தில் இந்த நீதிமன்றமானது ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றமாகவோ அல்லது சீராய்வு நீதிமன்றமாகவோ செயல்படாது. அநீதியை விளைவிக்கும் எந்தவொரு செயலையும் நீதிமன்றத்தின் செயல்முறையை தவறாக பயன்படுத்துவதையும் நீதிமன்றமானது கருதினால் வழக்கின் உண்மை கேள்வியை ஆராயலாம். ஒரு புகாரை ரத்து செய்ய கோரும்போது, புகார் அளித்தவர் என்ன குற்றம் சாட்டினார் என்பதையும் குற்றச்சாட்டுகள் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், ஏதேனும் குற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பிடுவதற்கான பொருட்களைப் பார்ப்பது அனுமதிக்கப்படுகிறது. நீதிமன்றம் கருதினால் நீதிமன்றம் உண்மையின் கேள்வியை ஆராயலாம்"

14. மேலும், பாரா 8-ல் பின்வருமாறு கூறப்பட்டது (தேவேந்திரப்பா வழக்கு SCC. Pg. 95)

"8...நீதித்துறை செயல்முறையானது ஒடுக்குமுறைக்கான கருவியாகவோ அல்லது தேவையற்ற துன்புறுத்தலாகவோ

இருக்கக்கூடாது. எந்வொரு நபரையும் தேவையில்லாமல் துன்புறுத்துவதற்கு பழிவாங்கலை கட்டவிழ்த்துவிடுவது ஒரு தனியார் புகார்தாரரின் கைகளில் ஒரு கருவியாக இருக்கக்கூடாது என்பதற்காக, நீதிமன்றம் கவனமாகவும் விவேகமாகவும் விவேகத்துடன் செயல்பட வேண்டும் மற்றும் செயல்முறை வழங்குவதற்கு முன் அனைத்து தொடர்புடைய உண்மைகளையும் சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதே சமயம், ஒரு வழக்கைத் தடுக்கவும் அவரது திடீர் மரணத்தை ஏற்படுத்தவும் குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஒப்படைக்கப்பட்ட கருவி அல்ல. பிரிவு 482 கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான நோக்கம் எந்தவொரு நீதிமன்றத்தின் செயல்முறையையும் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுக்க அல்லது நீதியின் முடிவை பாதுகாப்பதற்காக அறியக்கூடிய குற்றங்கள் தொடர்பான கோர்ட் மற்றும் அதன் கீழ் உயர்நீதிமன்றம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடிய வழக்குகளின் வகைகளை மாநிலத்தின் இந்த நீதிமன்றத்தால் சில விவரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஹரியானா மற்றும் பஜன்லால்”

15. சுந்தர் பாபு எதிர் தமிழ்நாடு மாநிலம் (2009) 14 SCC 244: இந்த வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட பிரிவு 482 கு.வி.மு.ச. கீழ் 498-A இ.த.ச. மற்றும் வரதட்சனை தடைச்சட்டம் பிரிவு 4-ன் கீழ் தொடுக்கப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கரவு செய்ய தாக்கல்

செய்யப்பட்ட மனுவாகும். அதில் கூறும்போது புகார் ஆனது சட்டத்தை தவறாக பயன்படுத்துவதை தவிர வேறில்லை என்றும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என்றும் சொல்லப்பட்டது. அந்த மனுவின் கூற்றுகளை எதிர்த்து அரசு தரப்பில் கூறும்போது புகாரில் குற்றம் நடந்ததற்கான ஆதார கூற்றுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் எனவே, அந்த மனுவை அனுமதிக்கக்கூடாது என்றும் எடுத்துகூறப்பட்டது. உயர்நீதிமன்றமானது அரசு தரப்பு கூற்றை ஒப்புக்கொண்டு மனுவை தள்ளுபடி செய்தது. இந்த நீதிமன்றமானது பஜன்லால் வழக்கை குறிப்பிட்டு அதில் உச்ச நீதிமன்றத்தால் 7 வகைப்பாடுகளை கருத்தில் கொண்டது.

16. மேலும், இந்த நீதிமன்றமானது பல உயர்நீதிமன்ற தீர்ப்புகளை கருத்தில் கொண்டும் ஹரியானா எதிர் பஜன்லால் (மேலே குறிப்பிட்டது) வினித்குமார் வழக்கு (மேலே குறிப்பிட்டது) கீழ்கண்ட கோட்பாடுகளை 4-வது பத்தியில் வகுத்துள்ளது.

> “41....பிரிவு 482 கு.வி.மு.ச. கீழ் உயர்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள உள்ளார்ந்த அதிகாரம் நீதியின் நலனை முன்னேற்றுவதற்கும் நீதிமன்றத்தின் புனிதமான செயல்முறைகளை சில உள்நோக்கத்துடன் ஒரு நபரால் துஷ்பிரயோகம் செய்ய முயன்றால், அந்த முயற்சியை நீதிமன்றத்தின் நுழைவாசலிலே முறியடிக்க வேண்டும். மேலும், ஹரியானா மாநிலம் எதிர் பஜன்லால் வழக்கில் இந்த நீதிமன்றத்தால் வகைப்படுத்தப்பட்ட ஏதேனும் ஒரு வரையறைக்குள் வழக்கு வந்தால், வழக்கு தொடர

நீதிமன்றத்தால் அனுமதிக்க முடியாது. நீதித்துறை செயல்பாடு என்பது ஒரு புனிதமான நடவடிக்கையாகும். அதுபோன்ற நடவடிக்கைகளை துன்புறுத்தும் கருவியாக மாற்றப்படுவதை அனுமதிக்க முடியாது. ஒரு குற்றவியல் நடவடிக்கை தவறான நோக்கத்துடன் நடத்தப்படுவதையும் தீங்கிழைக்கும் வகையில் தொடரப்படுவதையும் பிரிவு 482 கு.வி.மு.ச. அதிகார வரம்பை பயன்படுத்தி 7 வகையன வரையறைக்குள் வரும்போது நடவடிக்கை ரத்து செய்ய தயங்காது என்பதை ஹரியானா மாநிலம் எதிர் பஜன்லால் (SCC. Pg. 379 Para 102) அதில் கீழ்கண்டவாறு அதன் விளைவை எடுத்துச்சொல்லப்பட்டுள்ளது"

"102 (7) ஒரு குற்றவியல் நடவடிக்கையானது துஷ்பிரயோகம் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர் மீது பழிவாங்கும் நோக்குடன் மற்றும் தனிப்பட்ட நபர் காரணமாக தீங்கிழைக்கும் வகையில் வழக்கு தொடரப்பட்டால் மேலே உள்ள 7 வகைப்பாட்டில் வழக்கின் உண்மைகளை தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது"

மேலே கூறிய வகைப்பாட்டுகளில் 7-வது வகைப்பாடு மிகவும் தெளிவாக இந்த வழக்கு சங்கதிகளுக்கு பொருத்தமாக அமைந்துள்ளது. மேலும், ஹரியானா மாநிலம் எதிராக பஜன்லால் வழக்கின் தீர்ப்பை இந்த உயர்நீதிமன்றமானது குறிப்பிட்டு இருந்தபோதும் இந்த வழக்கின் உண்மை தன்மைகளை எடுத்துரைக்கப்படவில்லை. மேலும், விசாரணை அதிகாரி சமர்ப்பித்த இறுதி அறிக்கையும் கூறப்படவில்லை. ஆகவே,

தற்போதைய வழக்கானது ஒரு பொருத்தமான வழக்கு என்று நாங்கள் திருப்தி அடைவதாகவும் பிரிவு 482 கு.வி.மு.ச. படி இந்த உயர்நீதிமன்றமானது அதனுடைய உள்ளார்ந்த அதிகாரத்தை பயன்படுத்தி குற்றவியல் நடவடிக்கைகளை நீக்கரவு செய்யலாம்.

17. தற்போது மேலே கூறப்பட்ட வழக்குகளில் வகுத்துள்ள கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த தற்போதைய வழக்கின் உண்மைத்தன்மையை ஆராயும்போது தரப்பினர்கள் உறவினர்கள் என்பதும் அருகாமையில் வசித்து வருபவர்கள் என்பதும் தெளிவாகிறது. மேலும், குற்றம்சாட்டப்பட்ட நபரின் தந்தைக்கும் புகார்தாரருக்கும் இடையே சொத்து தொடர்பாக உரிமை வழக்கு பிரச்சனை தொடர்ந்து இருந்து வருகிறது. 19.07.2016 தேதியிட்ட அழைப்பாணை உத்தரவில் மேல்முறையீட்டாளர் ஆஜராக கோரும் மனுவில் புகார்தாரரின் வீட்டுக்கு முன் நடந்ததாக சொல்லப்படும் சம்பவங்கள் கூறப்பட்டுள்ளது. மேலும், 19.07.2016 அன்று இரு தரப்பினரிடையே நடந்த வாக்குவாதம் சம்மந்தமாக ஆவணங்களில் குறிப்பிட்டு இருப்பது தெரியவருகிறது. மேலும், காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு அதன் பேரில் பிரிவுகள் 151, 107 மற்றும் 116 கு.வி.மு.ச. நடவடிக்கை தொடங்கி இருப்பதும் தெரியவருகிறது. மேலும், 11.12.2016 தேதியிட்ட CO விசாரணை அறிக்கை நகலை அரசானது முன்னிலைப்படுத்தியுள்ளதில் அந்த விசாரணை அறிக்கை கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

> "... அந்த விசாரணை அறிக்கையில், விண்ணப்பதாரர் ஸ்ரீ சஜ்ஜாத் எதிர் தரப்பு அன்வருள் ஹக் இடையே வடிகால்

கட்டுவது தொடர்பாக தகராறு 19.07.2016 அன்று ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. தகராறு பற்றிய தகவலை காவல் நிலையம் பெற்றவுடன் அப்போதைய காவல்நிலைய தலைமை அதிகாரி ஸ்ரீ ஹரிபிரசாத் யாதவ் பிரிவுகள் 151, 107, 116 கு.வி.மு.ச. விசாரணை சட்டத்தின் கீழ் 20.07.2016 அன்று இரு தரப்பினரும் அமைதிகாக்க விசாரணை மேற்கொண்டார். மேலும், 03.08.2016 அன்று புகார்தாரர் மாண்புமிகு ஆணையத்தின் முன் தாக்கல் செய்த புகாரையும் ஆய்வு செய்ததில், புகார்தாரர் 29.08.2016 தேதியிட்ட மனுவிலும் 156(3) கு.வி.மு.ச. கீழ் குற்றச்சாட்டுகள் மாண்புமிகு சிறப்பு நீதிமன்றம் (போக்சோ சட்டம்) கூடுதல் அமர்வு நீதிமன்றம் எண்.1, ஜான்பூர் முன் புகார் செய்திருப்பதும் தெரியவருகிறது. மேலும், 14.10.2016 தேதியிட்ட உத்தரவில் வழக்கின் முழு உண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் அந்த வழக்கை பதிவு செய்ய போதுமான காரணங்கள் இல்லை என்றும் கூறியுள்ளது. விசாரணையின்போது பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலங்கள் மற்றும் அருகில் உள்ள நபர்களை விசாரணை செய்ததில் கண்ணுற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களின் படி புகார்தாரர் சஜ்ஜித் எதிர் தரப்பு அன்வருள் அலிக்கும் இடையே வடிகால் தொடர்பாக தகராறு சம்மந்தமான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளனர். மேலும், எதிர்தரப்பினர் அன்வருள் மகன்களான அஹமது அலி மற்றும் லியாகத் அலி ஆகியோர் விண்ணப்பதாரரின் மகள்களுடன் அசிங்கமான, அநாகரிகமான

செயலில் நடந்துகொண்டதாக விண்ணப்பதாரர் முன்வைத்த குற்றச்சாட்டுகள் வெளிச்சத்திற்கு வரவில்லை. விசாரணையின்போது விண்ணப்பதாரர் உரிய வாய்வழி ஆவண ஆதாரங்கள் சமர்ப்பிக்க தவறிவிட்டார். அந்த இடத்தில் அமைதியும் அமைதிக்கான சூழ்நிலையும் நிலவுமாறும் தரப்பினர் மீது விழிப்புடன் இருக்கும்படி கோர்ட்வாலி (SHO) காவல்நிலைய தலைமை அலுவலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். அவ்வாறு பணிவான ஆய்வுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

18. மேற்கூறிய அறிக்கையின் நிகழ்வு சம்பவங்களை எடுத்துக்கொள்வதற்காக மட்டுமே நாங்கள் கவனத்தில் எடுத்துள்ளோமே தவிர அதை ஒரு முக்கிய ஆதாரமாக எடுத்துக்கொள்ளவில்லை. அதே குற்றச்சாட்டுக்கள் மீது புகார்தாரர் 153(3) கு.வி.மு.ச. பிரிவின் கீழ் விண்ணப்பத்தை தாக்கல் செய்துள்ளார். அந்த விண்ணப்பம் 14.10.2016 அன்று தேதியிட்ட உத்தரவு மூலம் மாண்புமிகு அமர்வு நீதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதில் மேல்முறையீட்டாளருக்கு எதிராக புகார் பதிவு செய்ய போதுமான காரணங்கள் இல்லை என கூறப்பட்டுள்ளது,

19. அமர்வு நீதிபதியின் இந்த உத்தவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றவியலின் மறு ஆய்வில் (Criminal Revision) பிரிவு 156(3) கு.வி.மு.ச. கீழ் ஒரு விண்ணப்பத்தை நிராகரிப்பதில் இந்த நீதிமன்றமானது தலையிடவில்லை. இருப்பினும் புகார்தாரர்

உரிய விண்ணப்பத்தினை தாக்கல் செய்ய இருப்பதாக கருத்தில் கொள்கிறோம். புகார்தாரர் 1/2017 என்ற எண்ணில் புகார் தாக்கல் செய்துள்ளார். பிரிவு 156(3) கு.வி.மு.ச. கீழ் ஒரு விண்ணப்பத்தை நிராகரிப்பது எந்தவிதத்திலும் குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 200-ன் கீழ் புகார்தாரர் புகார் செய்வதை தடுக்காது என்பது உண்மையாகும்.

20. மேலே கவணிக்கப்பட்ட நிகழ்வுகளின் தொடர்ச்சிகளில் இருந்து தெரியவருவது என்னவெனில், 19.07.2016 தேதியிட்டதாக கூறப்படும் சம்பவத்திற்கு முன்பே புகார்தாரருக்கும் மேல்முறையீட்டாளர் தந்தைக்கும் இடையே சொத்து தொடர்பான தகராறு நிலுவையில் இருந்து வருவது தெரியவருகிறது. சம்பவம் நடந்த அதே தேதியில் காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று இரு தரப்பினருக்கும் எதிராக குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151, 107, 116-ன் கீழ் வழக்கு தொடர்ந்து இருப்பதும் அதன்படி இரு தரப்பினரும் அமைதி காக்க வேண்டும் என்றும் சண்டை சச்சரவு தன்மைகளை தெளிவாக காட்டுகிறது. அதன்பிறகு முதல் முறையாக குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் 156(3)-ன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அமர்வு நீதிபதியின் நீதிமன்றத்தின் முன்பாக புகார்தாரர் புகார் செய்துள்ளார்.

21. குற்றம் சாட்டப்பட்டவர்களை வரவழைக்கும் அமர்வு நீதிபதியின் உத்தரவில் இருந்து மேலும் ஒரு உண்மை வெளிவருவதை கவனிக்க வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட படி

மேல் முறையீட்டாளர் மற்றும் பிற நபர்களுக்கு எதிராக 19.07.2016 அன்று நடந்த இரண்டு சம்பவங்களை குறிக்கிறது. புகார்தாரரின் வீட்டிற்கே வெளியே உள்ள பொது பம்பு அருகே நடந்த ஒரு சம்பவம் மற்றும் இரண்டாவது சம்பவமானது புகார்தாரரின் வீட்டில் அதே நாளில் மேல்முறையீடு செய்தவர்கள் அவர்களின் தந்தை மற்றும் பிற குற்றவாளிகள் வீட்டிற்குள் புகுந்து புகார்தாரர் மற்றும் அவரது மகள்களை அடிக்க ஆரம்பித்துள்ளனர். ஆனால், அமர்வு நீதிமன்றமானது அழைப்பாணை உத்தரவில் புகாரில் குறிப்பிட்ட இரண்டாவது சம்பவத்தை நம்பவில்லை. புகாரில் கூறப்பட்டுள்ள சம்பவங்களில் ஒரு பகுதியை நம்பாமல் இருப்பது சம்பவத்தின் முந்தைய பகுதியின் மீது சந்தேகத்தின் நிழலை ஏற்படுத்தியிருப்பதை தெளிவாக்குகிறது.

22. ஏற்கனவே, தரப்பினருக்கு இடையே சிவில் வழக்கு நிலுவையில் இருப்பதை அமர்வு நீதிபதி தனது தீர்ப்பில் கவனத்தில் கொள்ளவில்லை.

23. தற்போதையே வழக்கின் உண்மைதன்மைகளில், தனிப்பட்ட மற்றும் தனிப்பட்ட பகைமையின் காரணமாக ஒரு தவறான நோக்கத்துடன் புகார்தாரர் குற்றவியல் நடவடிக்கைகள் தொடங்கப்பட்ட வழக்கு நிகழ்காலம் என்பது நாங்கள் முழுமையாக திருப்தியடைகிறோம். ஹரியானா மாநிலம் மற்றும் பிறர் எதிரே பஜன்லால் மற்றும் பிறர் (மேலே குறிப்பிடப்பட்ட படி) வழக்கின் தீர்ப்பை கவனித்தபோதிலும் இந்த தற்போதைய வழக்கின் சம்பவங்கள் அந்த தீப்பில் சொல்லப்பட்டுள்ள வகைபாட்டிற்குள்

உள்ளதா என்பதையும் ஆராயவில்லை. பஜன்லால் வழக்கில் வகைப்படுத்தப்பட்ட 7-வது வகைப்பாட்டில் இந்த தற்போதைய வழக்கு வருவது தெளிவாகிறது. அதனால், புகார்தாரர் குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்யக்கோரியதை உயர்நீதிமன்றம் பிரிவு 482 கு.வி.மு.ச. பிரிவின் கீழ் தனது அதிகாரத்தை செயல்படுத்துவதை தவறிவிட்டது.

24. மேற்கூறிய விவாதங்களின் பார்வையில், மேல்முறையீட்டாளருக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகளை அனுமதிப்பது தீங்கிழைக்கும் வகையில் நிறுவப்பட்ட ஒரு குற்றவியல் நடவடிக்கையை அனுமதிப்பதாக இருக்கும் என்று கருதப்படுவதால் இந்த நீதிமன்றம் தலையிட வேண்டிய அவசியமாகிறது.

25. முடிவாக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. புகார் வழக்கு எண். 1/2017 சஜ்ஜாத் குரைஷி எதிர் அன்வருள் ஹக் குரைஷி ஆகியோருக்கு எதிரான குற்றவியல் நடவடிக்கைகள் ரத்து செய்யப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து

நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."